## வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - 2019

---

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 19 ஆம் திகதிய 2891 (எஸ்ஆர்ஐ) மற்றும் 2890 (எஸ்ஆர்ஐ) எஸ்எப் ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ை ஆம் உறுப்புரையில் 4.04 மற்றும் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2639/2640 (எஸ்எப்) – எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2639– எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுற்படுத்தல் முகவராகும். வீதி அபிவிருத்தி அதிகார சபையே தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளின் முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்பிற்கு பொறுப்பாக உள்ளது. வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் ஏறத்தாழ 170 கிலோ மீற்றர்களும் 80 கிலோ மீற்றர்கள் நீளமான தேசிய வீதிகளை மேலதிக கடன்களின் கீழ் புனரமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 16,790 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 146 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 14,950 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 130 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. மேலும், 2012 நவம்பர் 12 இன் 2890 எஸ்ஆர்ஐ (எஸ்எப்) மேலதிக நிதியீட்டல் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 8,840 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 68 மில்லியன் தொகையை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. இதில், ரூபா 4,420 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 34 மில்லியன் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மேலதிகமாக, ரூபா 3,900 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 30 மில்லியன் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் 2012 நவம்பர் 12 இன் 2891 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் வடக்கு மற்றும் வட மத்திய மாகாண தேசிய வீதிகள் நெடுஞ்சாலைகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஒக்டோபர் 22 ஆம் திகதி அதன் ஆரம்ப கடன் உடன்படிக்கையின் கீழ் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்திசெய்திருந்தது. மேலதிக நிதியீட்டு ஒழுங்குகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 மே 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டு 2019 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது

சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் செத்சிரிபாய கட்டிடத்தில் ஏனைய மூன்று செயற்திட்டங்களுடன் செயற்படுகின்றது. மின்சாரம், தொலைபேசி, நீர், அலுவலக வாடகை மற்றும் சுத்திகரிப்பு | மொத்த செயற்திட்டக் கிரயம் ஒதுக்கப்படாத கிரயத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | என்ஆர்சீபீ இற்காக ஸ்தாபிக்கப்பட்ட அதே அலுவலகத்தில் 4 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான மூலவளங்கள் என்ஆர்சீபீ இற்கு உரித்தானவையாகும். செயற்திட்டங்களிடையே பொதுச் செலவினங்களைப் பகிர்வதே சரியான | செயற்திட்டத்தின் மேந்தலைக் கிரயம் செயற்திட்டங்களிடையே பகிரப்பட்டு வேறாக செயற்திட்டத்தின் சரியான கிரயம் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| | சேவைகள் போன்ற மேந்தலைக் கிரயத் தொகையான ரூபா 3.71 மில்லியன் ஏனைய மூன்று செயற்திட்டங்களுடன் பகிரப்படாது முற்றாக வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தால் மாத்திரமே ஏற்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | முறையாக இருந்த போதிலும், இதனை நடைமுறைப்படுத்துகையில் நாம் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றோம். இது குறித்து ஈசீஜபி தொடர்பான 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வு ஐயவினா மற்றும் ரீபீபீஎப் தொடர்பான 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கையிலும் நாம் இப் பிரச்சனைகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ளோம். செயற்திட்ட அடிப்படையில் பொதுச் செலவினங்களிற்காக மூல விலைப்பட்டியல்களை வேறாகப் பெறுவதிலான பிரச்சனை. உதாரணம். முழுக் கட்டிடத்திற்கும் வாடகைக்காக ஒரு விலைப்பட்டியலையே நாம் பெறுகின்றோம். ஒரே விலைப்பட்டியலைப் பயன்படுத்தி பயன்பாட்டுச் செலவினத்தைப் பகிர்வது பிரச்சனையானதாகும். கொடையாளி ஆவணங்களின் பிரதியையோ அல்லது பதிவையோ ஏற்றுக்கொள்ளமாட்டார். | |
| (ஆ) | இச் செயற்திட்டத்தின் செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவு ஏனைய 3 செயற்திட்ட நடவடிக்கைகளிற்குப் பொறுப்பானதுடன் ஏனைய சகல செயற்திட்டங்களுக்காக பொதுவாக ஏற்கப்படும் ரூபா 32.27 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான செயற்திட்ட மேம்பாட்டுச் செலவினத் தொகையும் ஏனைய | மொத்த செயற்திட்டக் கிரயம் ஒதுக்கப்படாத கிரயத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்குறித்த (அ) இற்கான அதே பதிலாகும். எவ்வாறெனினும், இவ் விடயத்திற்கு பின்வருமாறு பதிலளிக்க விரும்புகிறேன். 2019 நிதிக்கூற்றுக்களின் 11 ஆம் பக்கம் 01 ஆம் பட்டோலையின் படி, மேம்பாட்டு செயற்பாட்டுக் கிரயம் ரூபா 32,237,872.65 ஆகும். இதில் ரூபா 23.81 மில்லியன் தொகையான பதவியணி ஊதியமும் ரூபா 5.4 மில்லியன் தொகையான வாகன வாடகைக் கட்டணங்களும் | செயற்திட்டத்தின் மேந்தலைக் கிரயம் செயற்திட்டங்களிடையே பகிரப்பட்டு வேறாக செயற்திட்டத்தின் சரியான கிரயம் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்டங்களிற்கு விகிதாசார ரீதியாகப் பகுக்கப்படாது இச் செயற்திட்டத்தின் கிரயமாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. | | உள்ளடக்கப்பட்டுள்ளன. மீதி ரூபா 3.41 மில்லியன் ஏனைய நானாவித செலவினங்களையும் உள்ளடக்கியுள்ளன. இச் செலவினங்கள் செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவின் கீழ் உள்ள சகல செயற்திட்டக் கண்காணிப்புகளிற்கும் உரித்தானவையாகும். ஏன்ஆர்சீபீ பதவியணியே ஏனைய 3 செயற்திட்ட நடவடிக்கைகளையும் செயற்படுத்துகின்றனர். ரூபா 23.81 மில்லியன் தொகையான அத்தகைய கிரயத்தை இது மீளளிக்கப்படாமையால் ஏனைய செயற்திட்டங்களுக்கிடையே பகிர்வது பிரச்சனையானதாகும். இதே வகையில் செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவின் மிகுதிக் கிரயமும் பிரதான செயற்திட்டத்திற்கேயே சாட்டப்படுகின்றன. | |
| (இ) | நாட்குறிப்பு பதிவு இல.19-116 இன் படி, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய தொகையான ரூபா 40 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் ரூா 37.93 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. | அட்டுறு செலவினங்கள் ரூபா 2.07 மில்லியன் தொகையால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உடன்படுகின்றோம். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளின் அட்டுறுக் கணக்கின் தீர்ப்புக் கட்டத்தின் போது இது ஏற்பட்டுள்ளது. 2019.01.01 இன் திரண்ட அட்டுறுச் செலவின மீதி ரூபா 146,230,006.77 ஆகக் காணப்பட்டது. இது 2019 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டு ரூபா 148,651,119.80 ஆகக் காணப்பட்டது. மேலதிகக் கணக்கீடு ரூபா 2,071,113.03 ஆகும். அதே கணக்கின் கொண்டு சென்ற மீதி ரூபா 2,071,113.03 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. | இது உரிய பேரேட்டுக் கணக்கில் சீராக்கப்பட வேண்டும். |

பட்டியல்கள் தயாரிக்கப்படுகையில் எம்/எஸ் துவாதே பிரதர்ஸ் - சீபீ 24 அட்டுறுத் தொகையில் இருந்து தவறாக சீராக்கப்பட்டுள்ளது. அட்டுறு செலவினங்களின் கணிப்பீடும் இணக்கக் கூற்றுக்களும் இணைக்கப்பட்டுள்ளன. இது 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகையில் உரிய கணக்கு சீராக்கப்படுவதற்கு குறிக்கப்பட்டுள்ளது.

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் திகதிய 5 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு பொறிமுறைகள் நலிவான நிலையில் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமையால் உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 756 | ரூபா 105.6 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், இயந்திர மற்றும் | ஏனைய நோக்கங்களிற்கான பயன்பாடு, முறைகேடான பயன்பாடு மற்றும் சேதங்களிற்கான இடமுண்டு. | 2019 திசெம்பர் மாதம் பொருள்மெய்மையாய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது துடன் ஆண்டிறுதிக் கணக்கு முடிவுறுத்தல் போன்ற காரணங்களால் முடிவுறுத்துவதில் | நிதிப் பிரமாணங்களின் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | உபகரணங்களின் பொருள் மெய்மையாய்வு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | தாமதம் ஏற்பட்டிருந்தது. 2020 இன் முதல் காலாண்டிற்குள் பூர்த்தி செய்வதற்கு முயன்ற போதிலும் கோவிட் 19 இன் காரணமாக பூர்த்தி செய்ய முடியாது போயிற்று. | |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கை இல. 842 | செயற்திட்டத்தினால் நிலையான சொத்துக் பதிவேடு பேணப்பட்டிருக் கவில்லை. | ஏனைய நோக்கங்களிற்கான பயன்பாடு, முறைகேடான பயன்பாடு மற்றும் சேதங்களிற்கான இடமுண்டு. | பதிலளிக்கப்படவில்லை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

கிடைக்கப்பெற்ற தகவலின் படி, 170 கிலோமீற்றர்கள் நீளமான வட மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள 06 தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 10 தொகுதிகளின் கீழ் 03 புனரமைக்கப்பட்ட தேசிய விதிகளின் 03 வருட செயற்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு வேலைகள் உள்ளடங்கலாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும், ஏனைய 02 தேசிய வீதிகளின் புனரமைப்பிற்கான ஒப்பந்தம் 2015 இல் வழங்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் ஆரம்ப அமுலாக்கல் திட்டத்தின் கீழான புனரமைப்பு சேமிப்புகளைப் பயன்படுத்தி பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலதிகமாக, மேலதிக நிதியீட்ட ஒழுங்குகளின் கீழ் வழங்கப்பட்டிருந்த வட மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள 07 தேசிய வீதிகளின் ஏனைய பிரிவுகளின் 121.98 கிலோ மீற்றர்களிற்கான புனரமைப்பு வேலைகள் 2016 திசெம்பர் 31 வரையில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. கடன்களின் சேமிப்புத் தொகையில் 2017 ஏப்ரல் 28 ஆம் திகதி ஓர் புதிய ஒப்பந்தம் ஏ 009 கண்டி யாழ்ப்பாண வீதியின் இரம்பாவ முதல் மதவாச்சி 9.64 கிலோ மீற்றர்கள் ( 140 + 760 கிமீ முதல் 150 + 400 கிமீ) புனரமைப்பதற்காக ஒப்படைக்கப்பட்டு 2018 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டம் அமைச்சரவையினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினது அங்கீகாரத்தை மதவச்சி – ஹொரவபொத்தான வீதி (பீ 238) பகுதி 37 +800 கிமீ வரை இரு ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது. எவ்வாறெனினும், புனரமைப்பு வேலைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100 சதீதமான பௌதீக முன்னேற்றத்தை எதிர்பார்த்திருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு 58 சதவீதம் மற்றும் 64 சதவீதம் ஆன குறைவான முன்னேற்றத்தையே காண்பித்திருந்தன.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யும் திகதி கருத்திற்கொள்ளப்படாது 2019 திசெம்பரில் பூர்த்தி செய்யப்படுவதற்கான உடன்பாட்டுடன் 2019 மே மாதம் ரூபா 1,388.22 மில்லியன் கிரயத்தில் இரு ஒப்பந்தக்காரர்களுக்கு 02 மேலதிக ஒப்பந்தங்களை பீ 282 மதவாச்சி, ஹொரவபொத்தான வீதிப் பிரிவில் 10 +000 கிமீ முதல் 23 +000 கிமீ வரையிலும் 23 +000 கிமீ முதல் 37 +800 கிமீ வரையிலும் முன்னேற்றத்தின் புனரமைப்பிற்காக வழங்கப்பட்டிருந்தது. வேலைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கான கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் இவ் ஒப்பந்த வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2020 யூன் 23 அன்றும் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை கண்டறியப்பட்டன. | செயற்திட்டக் கிரயம் மற்றும் ஒப்பந்தக் கிரயம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உண்டு | கடன்களின் சேமிப்புத் தொகையைப் பயன்படுத்துவதற்காக ஒப்பந்தத் தொகுதிகளான சீபீ 23 மற்றும் சீபீ 24 பரிந்துரைக்கப்பட்டிருந்தன. 2019 திசெம்பர் 31 வரையான கடன் நீடிப்பு 2018 நவம்பர் 18 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து மேலதிக ஒப்பந்தத் தொகுதிகளான சீபீ 23 மற்றும் சீபீ 24 இற்கான கொள்வனவுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்த தொகுதிகளின் காலப்பகுதி வேலைகளின் நோக்கெல்லை முடிவடைந்திருந்தமையால் 9 மாதங்களிற்காக உடன்பட்டிருந்தன. பல அணைக்கட்டுகளின் கட்டமைப்புகள் முன்னரே புனரமைக்கப்பட்டுள்ளன. 2019 சனவரி 22 மாதமே ஏலங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் 2019 மார்ச் 26 அளவில் வழங்கப்பட்டிருந்தன. 2019 மார்ச் 30 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் இறுதியில் பூர்த்தியடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளன. சுகல நிர்மாணிப்பு நடவடிக்கைகளும் கடன் காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட்டு கொடுப்பனவுகளும் கடன் முடிவுறுத்தல் காலப்பகுதிக்குள் கொடுத்துத் தீர்க்கப்படுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளன.<br><br>துரதிஷ்டவசமாக, நாட்டின் சுமூகமற்ற நிலை காரணமாக 2019 ஏப்ரல் மாதத்தின் போது ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டது. அத்துடன் | வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒப்பந்தக்காரரிற்கு அழுத்தம் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்த வேலைகள் மீது கிட்டிய கண்காணிப்பு அவசியம். |

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கும் வெடி பொருட்களை வழங்குவதற்கு அரசாங்கம் வரையறுத்திருந்தது. இந் நிலை நிர்மாணிப்புப் பணிகளை பெருமளவில் பாதித்திருந்தது. ஒப்பந்த நிபந்தனைகளின் படி, அரசாங்கத்தால் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கைக் காரணமாக முன்னேற்றத்திற்கு ஏதேனும் இடையூறு ஏற்படின் ஒப்பந்த நிறைவேற்றலுக்காக கால நீடிப்பை பெறுவதற்கு ஒப்பந்தக்காரருக்கு உரித்துள்ளது. (துணைப் பந்தி 8.5 – அதிகாரிகளால் ஏற்பட்ட தாமதம்). இதன் படி, காலநீடிப்பு வழங்கப்பட்டு ஒப்பந்தங்கள் முறையே 2020 மார்ச் இறுதியிலும் 2020 ஏப்ரல் மாத ஆரம்பத்திலும் பூர்த்தியாக்கப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், நிர்மாணப் பணிகள் 2020 மார்ச் முதல் 2020 மே வரையான காலப்பகுதியின் போது கோவிட் 19 நோய்தொற்றின் காரணமாக பாதிப்புற்றதுடன் தற்காலிகமாக வேலைத்தளங்களை மூடுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய காரணங்களால் ஏற்பட்ட தாமதத்தினால் ஒப்பந்தங்கள் 2020 ஆகஸ்ட் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இன்றளவில் சீபீ 23 உம் சீபீ 24 ஒப்பந்தத் தொகுதிகள் பாரியளவில் முறையே 2020 ஆகஸ்ட் 5 ஆம் 2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதிகளில் பெருமளவில் பூர்த்தியடையும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ஏ 009 கண்டி யாழ்ப்பாண வீதியின் இரம்பாவவில் இருந்து மதவாச்சி வரையான பகுதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீடு (140 + 760 கிமீ முதல் 150 + 400 கிமீ ) கிரய மதிப்பீடுகளின் தயாரிப்பின் போது போதியளவு கவனம் செலுத்தப்பட்டிராததன் காரணமாக ஒப்பந்த வழங்கலின் கிரயத்தைப் பார்க்கிலும் 3.01 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 24.12 மில்லியன் வரையிலான அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது. மேலும், அளவைப் பட்டியலின் 32 பொருட்கள் மதிப்பிடப்பட்ட அளவீடுகளைப் பார்க்கிலும் குறிப்பாக 59.66 சதவீதம் முதல் 1845 சதவீதம் வரையான வீச்சில் அதிகரித்திருந்ததுடன் வழங்கப்பட்ட ஒப்பந்தக் கிரயத்தைப் பார்க்கிலும் மேலதிகமாக ரூபா 136.63 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மேலதிக கிரயம் ஏற்கப்படும் | ஏ 009 கண்டி யாழ்ப்பாண வீதியின் இரம்பாவவில் இருந்து மதவாச்சி வரையான பகுதியின் புனரமைப்பு அல்லது முன்னேற்றத்திற்காக தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீடு (140 + 760 கிமீ முதல் 150 + 400 கிமீ ) ரூபா 960 மில்லியன் ஆகும். ஆரம்ப ஒப்பந்தத் தொகை ரூபா 799.55 மில்லியனானதுடன் இறுதி ஒப்பந்தத் தொகை ரூபா 823.66 மில்லியானதுடன் இது ஆரம்ப ஒப்பந்தத் தொகையிலும் 3% ஆலான அதிகரிப்பாகும்.<br><br>நிலத்தின் நிலை குறித்து விபரமாக ஆராயப்படாமல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. சிவில் பணிகளில் நிலத்தின் நிலை மற்றும் எதிர்பாராத செயற்பாடுகளைத் துல்லியமாகக் கணிப்பிட இயலாது. ஆகவே, சில கருத்தியல் அனுமானங்களுடனேயே மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. மேலும், இப் பகுதியின் மூன்று இடங்களில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டு மண்ணரிப்பில் இருந்து தடுப்பதற்கும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. களத்திலேயே இப் பகுதிகளில் உள்ள மென் நிலச் சிகிச்சை மற்றும் துணைத்தர மேம்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆகவே, அளவீட்டு மாற்றங்கள் சிவில் வேலை ஒப்பந்தங்களில் பொதுவாக அனுமதிக்கப்படுவதுடன் பௌதீக நிகழத்தக்கவைகளும் ஒப்பந்தங்களின் போது வழங்கப்படுகின்றன. ஒப்பந்தத்தின் எப்ஐடீஐசீ மற்றும் துணைப் பிரிவு 13.1 இன் நிபந்தனைகளின் படி, ஒப்பந்தத்தில் உள்ள எந்த ஒரு பொருளின் அளவிலும் மாற்றங்கள் அவசியமாக மாறுபாட்டைக் கொண்டிருப்பதில்லை என்பதை வலியுறுத்துகின்றன. அத்துடன் கள அடிபாகத்தில் பாழடைந்த நிலையில் காணப்பட்ட பாலம் ஒன்றும் அவதானிக்கப்பட்டு அது மூல நோக்கெல்லைக்கு | அளவைப்பட்டியலிற்கும் மேலதிகமான கொடுப்பனவுகளின் பாரிய வேறுபாடு மற்றும் விளைவுகள் மற்றும் காரணங்கள் குறித்து ஆராயப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உட்பட்டிராத போதிலும் புனரமைக்கப்பட்டிருந்தது. மேலும், இரம்பாவ மற்றும் இகிரிகொல்லாவ நகரங்கள் குறித்த பிரதேச சபைகளால் மேற்கொள்ளப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்ப முன்னேற்றப்பட்டுள்ளன. ஆகவே, மேற்குறித்த மேலதிக வேலைகளிற்காக குறித்த பொருட்கள் அதிகரித்துள்ளன. | |
| (இ) | ஏ 009 கண்டி யாழ்ப்பாண வீதியின் இரம்பாவவில் இருந்து மதவாச்சி வரையான பகுதியின் புனரமைப்பு அல்லது முன்னேற்ற வேலைகள் 233 நாட் தாமதத்துடன் பூர்த்தியடைந்திருந்தன. செயற்திட்டம் தாமதக் கட்டணமாக ரூபா 39.97 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையை ஒப்பந்தக்காரரிடம் இருந்து கழித்திருந்த போதிலும் பின்னர் காலநீடிப்பை வழங்கி ஒப்பந்தக்காரர்களுக்கு கழித்த தொகையை மீளச் செலுத்தியிருந்தது. அத்தகைய கால நீடிப்பு வழங்கப்பட்டமையின் காரணமாக ஆரம்ப மற்றும் பொதுச் செலவினம் அதிகரித்து மேலதிகக் கிரயமான ரூபா 4.27 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் ஏற்கப்பட்டிருந்தது. | மேலதிக கிரயம் ஏற்கப்படும் | ஒப்பந்தக்காரரால் வேலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட முடியாத போது, ஒப்பந்த நிபந்தனைகளின் 8.7 ஆம் துணைப் பந்தியின் படி தொழில் தருனரால் தாமதத்திற்கான தண்டப்பணத்தைக் கழித்துக்கொள்ள முடியும். ஓப்பந்தக் காலப்பகுதியின் இறுதி மாதத்திற்கான கொடுப்பனவுச் சான்றுறுதிப்படுத்தலில் ஒப்பந்தக்காரர் பணிகளை நிறைவேற்றியிருக்கவோ அல்லது ஒப்பந்தத்திற்கான காலநீடிப்பையோ பெற்றிருக்கவில்லை. ஆகவே, ஒப்பந்தத்தின் படி, தாமதத்திற்கான தண்டப்பணம் கழிக்கப்பட்டது. இதே வேளை ஒப்பந்தக்காரர் கால நீடிப்பை முன்வைத்திருந்ததுடன் பொறியியலாளருக்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையே கலந்துரையாடல்கள் ஏற்பட்டு இதனை நிரூபிப்பதற்காக மேலதிக தகவல்கள் கோரப்பட்டிருந்தன. ஆவணப்படுத்தல்கள் பூர்த்தியானதும் பொறியியலாளர் தமது பரிந்துரையை முன்வைத்திருந்தார். இது தொழில்தருனரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட காலநீடிப்பு வழங்கப்படுகையில் அவ் ஒப்பந்தக்காலம் முடிவுறும் வரையில் தாமதத்திற்கான தண்டப்பணம் அறவிடப்படுவதற்கு எக்காரணமும் இல்லை. ஒப்பந்னதக்காரருக்கு கழிக்கப்பட்ட | ஒப்பந்த உடன்படிக்கையுடன் இணங்கி நடத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தாமதத்திற்கான தண்டப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்து உள்ளது. இதன் படி, ஒப்பந்தத்தின் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. நீடிக்கப்பட்ட காலத்திற்காக அளவீட்டுப் பட்டியலின் படி வழங்கப்பட்ட ஒப்பந்தக்காலத்தை தொடர்புபடுத்தி கொடுப்பனவுகளை ஒப்பந்தக்காரர் பெற்றுக்கொள்ளமுடியும். | |
| (ஈ) | பொதுச் செலவினத்தின் கீழ் ஒப்பந்த உடன்பாட்டின் ஒட்டுமொத்த கொடுப்பனவிற்காக ரூபா 2 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக ரூபா 2.63 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ஒப்பந்தக்காரருக்கு ரூபா 0.63 மில்லியன் தொகையான மிகையான கொடுப்பனவு பொதுச் செலவினங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்டக் கிரயம் தேவையற்ற முறையில் அதிகரிக்கப்படும் | 2020 ஒக்டோபர் 14 ஆம் திகதிய கணக்காய்வு ஐயவினாவின் படி, ரூபா 2 மில்லியன் தொகை பின்வரும் காப்புறுதிகளுக்கானவையாகும்.<br>வேலைகளுக்கான காப்புறுதி – தாக்கம் அறிவிக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறும் வரை ஒப்பந்தக்காரர்களின்<br>உபகரணங்களுக்கான காப்புறுதி - தாக்கம் அறிவிக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறும் வரை<br>மூன்றாம் நபர் காப்புறுதி - தாக்கம் அறிவிக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறும் வரை<br>தொழிலாளி நட்டஈடு – நிர்மாணிப்பு பூர்த்தியாகும் வரை<br>ஒப்பந்தத்தின் படி, மேற்குறித்த காலப்பகுதிக்காக காப்புறுதி வழங்கப்பட்டுள்ளதுடன் அக் காப்புறுதி ஆரம்ப ஒப்பந்தக் காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு குறித்த நாட்கள் காலாவதியடையும். ஒப்பந்தக்காரர் ஏதேனும் காலநீடிப்பு கோரியிருப்பின் புதிய பூர்த்தித் திகதியின் படி காப்புறுதியை நீடித்துக்கொள்ள வேண்டும். ஏலத்தில், அடிப்படை ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியைக் குறிப்பிட்டே காப்புறுதிகளை ஒப்பந்தக்காரர் வழங்கியிருப்பார். அத்துடன் காலநீடிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டமையானது தாமதத்திற்கான காரணத்தில் இருந்து ஒப்பந்தக்காரர் விடுவிக்கப் பட்டு தாமதம் தொழில் தருனரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தாகும். ஆகவே, மேலதிக | மேலதிகக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்கான நடவடிக்கை அவசியம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காலப்பகுதிக்கான காப்புறுதிக் கிரயம் செலுத்தப்பட வேண்டியதாகும். | |
| (உ) | ஒப்பந்த உடன்படிக்கை யின் பொது நிபந்தனையின் 4.2 ஆம் உப பந்தியின் படி, ஒப்பந்த தொகுதிகளின் மீது வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவிற்கான வங்கிப் பிணைகள், தொழிலாளிகளுக்கான நட்டஈட்டுக் காப்புறுதி, மூன்றாம் தரப்பினர் காப்புறுதி, ஒப்பந்ததாரர் களின் உபகரணங் களுக்கான காப்புறுதி, செயற்பாட்டு முறிகளின் மீதான ஆவணத் தயாரிப்பு மற்றும் வங்கிக் கட்டணங்கள் ஆகியவற்றின் கிரயங்கள் ஒப்பந்ததாரர்களால் ஏற்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், மேற்குறித்த தேவைப் பாட்டிற்கு முரணாக 2018 ஆம் 2019 ஆம் ஆண்டுகளில் 3 ஒப்பந்தத் தொகுதிகளின் அளவைப் பட்டியல் பொருட்களின் பஒப்பந்தக்காரர்களுக்கு குறித்த முறிகளின் கிரயம் மற்றும் காப்புறுதியை அறவிட்டுக்கொள்வதற்கு ரூபா 10.05 மில்லியன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப் பட்டிருந்தது. | செயற்திட்டக் கிரயம் தேவையற்ற முறையில் அதிகரிக்கப்படும் | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் 4.2 உப பந்தி (சீஓசீ) – செயற்பாட்டு பிணையை (தனது கிரயத்தில்) ஒப்பந்தக்காரர் முறையான செயற்பாட்டிற்காக் பெற்றுக்கொள்ள முடியும் என செயற்பாட்டுப் பிணை குறிப்பிட்டுள்ளது. இப் பந்தி செயற்பாட்டுப் பிணையை மாத்திரமே தொடர்புபடுத்தியுள்ளது. கிரயத்தை குறிப்பிடாது காப்புறுதிகளின் சமர்ப்பணம் குறித்து துணை சீஓசீ இன் ஏனைய குறித்த துணைப்பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>காப்புறுதிகள், பிணைகள் முதலி யன நிர்மாணிப்புகளின் இடர் பகிர்விற்கான அளவீடுகளாகும். காப்புறுதிகள் மற்றும் பிணைகள் வழங்குவதற்கான கொடுப்பனவைத் தவிர்ப்பதற்கு கடுமையான கொள்கை எதுவும் இல்லை. இதனை கொடுப்பனவு விடயமாகச் சேர்த்துக்கொண்டு கிரய மீளளிப்பிற்காக ஏலதாரருக்கு தனது மேந்தலையைக் கூறைக் குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். மாறாக, அளவீட்டுப் பட்டியலில் வழங்கப்படாவிட்டால் இக் கிரயங்களை உள்ளடக்கு வதற்கு அவரது மேந்தலைகளில் சேர்த்துக்கொள்வார். அளவீட்டுப் பட்டியலில் பொருட்களை வழங்கு வதில் நன்மைகள் உள்ளதுடன் நீடிக்கப்பட்ட காலத்திற்கான கிரயம் மதிப்பிடப்படக் கூடியதுடன் விலை போட்டித்தன்மைக்குரியதாவதுடன் குறைக்கப்பட்ட மேந்தலைகள் புதிய வேலைகளுக்குப் பொருந்துவனவாகும்.<br><br>இவ் ஒப்பந்தங்களில் சீபீ 22, சீபீ 23 மற்றும் சீபீ 24, பிணை மற்றும் காப்புறுதிக்கான கொடுப்பனவு | ஏல ஆவணங்கள் தயாரிக்கப்படுகையில் இப் பொருட்கள் தெளிவாக விளக்கப்பட்டு அளவைப் பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டும். |

விடயம் அளவீட்டுப் பட்டியலில் எமது வழமையாக தொடர்ந்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஏலத்தைத் தயாரிக்கையில் ஏற்கப்பட்ட கிரயத்தின் மீளளிப்பை ஏலதாரர்கள் கருத்திற்கொண்டிருக்கலாம்.

ஆகவே, செயற்பாட்டுப் பிணைக் கான கொடுப்பனவு, முற்பணப் பிணை, வேலைகளுக்கான காப்புறுதி, ஒப்பந்த உபகரணங்களு க்கான காப்புறுதி, மூன்றாம் நபர் காப்புறுதி மற்றும் தொழிலாளி நட்டஈடு உடன்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் படி செலுத்தப்பட்டிருந்தன.